**தலைப்பு -175 - அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 10 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 இலிருந்து 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 834,546,865 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 778,994,830 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி தேறிய ஏற்பாட்டில் ரூபா 55,552,035 தொகை அதாவது 6.6 சதவீதம் எஞ்சியிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 110,769,415 | 84,190,330 | 26,579,085 | 24 |
| மூலதனம் | 723,777,450 | 694,804,500 | 28,972,950 | 4 |
| மொத்தம் | **834,546,865** | **778,994,830** | **55,552,035** | 6.6 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

- 02 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 763,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

- 09 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்கான தேறிய ஏற்பாட்டில் 58 சதவீதத்திற்கும் 92 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவைக் கொண்டிருந்தன.

**(iii) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| **விடய இலக்கம்** | **செலவினம்** | | **பெறுவனவு** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|---|
| | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 17501 | 5,000,000 | 2,544,000 | 1,500,000 | 2,164,654 | 20,000,000 | 10,397,218 |

**(இ) பொது வைப்புக் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் பொது வைப்புக் கணக்கில் ரூபா 3,140,978 காணப்பட்டது. 02 ஆண்டுகள் கடந்த ரூபா 447,853 தொகையான 02 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்**

2013 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்த மிகை, பற்றாக்குறை மற்றும் வேறு பரிந்துரைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வேறு நிறுவகத்திற்குரிய சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஓர் வாகனம் முறையான அங்கீகாரமின்றி அமைச்சால் 2013 மே 06 ஆம் திகதி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் பெருந்தோட்டக் கம்பனி ஒன்றிற்கு உரித்தான ஓர் வாகனமும் அவ்வாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 1 வருடத்திற்குக் குறைவான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 795,508 ஆக இருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 139(4) | 9,471,843 | பற்றுச்சீட்டுக்கள் இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 231(1) மற்றும் 237(அ) | 343,490 | கொள்வனவிற்குரிய கொள்வனவுக் குழுத் தீர்மானம், கொள்வனவுச் சிட்டைகள் மற்றும் பதிவுப் பொருட் சான்றிதழ்கள் உறுதிச்சீட்டுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | - | போக்குவரத்து தொடர்பான மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டில் 06 வாகனங்களுக்குரிய மாதாந்த பொழிப்பு அறிக்கைகளும் நாளாந்த ஓட்ட |

அட்டவணைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நிருவாக சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சிற்குரிய வாகனங்களில் 06 மாதங்களுக்கு ஒரு முறை பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 1.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 14 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 56 | 32 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 34 | 02 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | மொத்தம் | 114 | 82 | 32 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.